**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 216/2015</u>**
**<u>நாள் 04/06/2025 புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – சங்கர் | த/பெயர் – துரை |
| வயது – 54 | தொழில் – |
| விலாசம் – திருக்கழுக்குன்றம் | |

**<u>2 முதல் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விலாசத்தில் சுமார் 23 வருடமாக வசித்து வருகிறேன். வழக்கு குறித்த விவரங்கள் முழுவதுமாக எனக்கு தெரியும். இந்த வழக்கில் இந்து அறநிலைய துறை பிறப்பித்த உத்தரவு பற்றி ஓரலவு தெரியும். மேற்படி உத்தரவில் பிரதிவாதியும் கோவில் நிர்வாகத்தை கவணிக்க உத்தரவு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயிலை பற்றிய முழு விவரமும் தெரியும். இந்து அறநிலைய துறை உத்தரவுக்கு எதிராக அதன் மேல் அதிகாரியிடம் தான் மேல் முறையீடு செய்யவேண்டுமே தவிர உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றும் எனவே இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே வாதியின் வழக்கு சட்டப்படி செல்லாது என்றாலும் இந்து அறநிலைய துறை பிறப்பித்த உத்தரவு செல்லும் என்றாலும் நான் வாதிக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**